<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 12 /2025</u>

**LW : 25 PW : 23**

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியய்யா | த / பெ. | பிச்சைராசு |
| கிராமம் | : | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | காவல் ஆய்வாளர் | வயது | 54 |

**17.12.2025.**

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.

**முதல்விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம் பொருளாதார குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.12.2021 அன்று திருவாரூர் பொருளாதார குற்றப்பிரிவில் பணியிலிருந்தபோது குற்ற எண்.01/2021, இ.த.ச.பிரிவுகள் 408, 409, 465, 468, 471, 477(A)ன்கீழ் 26.02.2021 அன்று பணியிலிருந்த காவல் ஆய்வாளர் திருமதி.மணிமேகலை என்பவர் வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை மேற்கொண்டு அவர் பணிமாறுதல் காரணமாக சென்றுவிட்டதால் மேற்படி வழக்குகோப்பினை பார்வைக்கு வைத்ததனை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு தொடர்ந்து விசாரணை மேற்கொண்டேன்.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.12.17 15:44:25 +0530

அந்த விசாரணையில் ஏற்கனவே குற்ற எண்.01/2021 வழக்கில் புகார் அனுப்பியிருந்த துணை பதிவாளர் திரு.கார்த்திகேயன் என்பவரை மறுவிசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதனை தொடர்ந்து Z 764 வலங்கைமான் பஞ்சாயத்து அலுவலர்கள் மற்றும் கடன் சங்கத்தில் நடந்த கையாடல் குறித்து அந்த பணியாளர் சங்கத்தில் உறுப்பினரான திரு.அருண் என்பவர் உறுப்பினர் எண்.642 கடன் எண்.60 இல் கடன் பெற்ற இடைநிலை ஆசிரியரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதனை தொடர்ந்து திருமதி.அனிதா என்பவர் உறுப்பினர் எண்.634 கடன் எண்.088 இல் கடன் பெற்றவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மாரீஸ்வரி உறுப்பினர் எண்.652 கடன் எண்.488 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ராம்குமார் கடன் எண்.109 உறுப்பினர் எண்.680 என்பவரையும், நேசப்பிரியா கடன் எண்.1738 உறுப்பினர் எண்.146/733, ராஜேந்திரன் உறுப்பினர் எண்.703 கடன் எண்.1770 ஜாய்ஸ்ராணி உறுப்பினர் எண்.682, கடன் எண்.1803, முருகானந்தம் உறுப்பினர் எண்.131/171 கடன் எண்.210 ஆகியோர்களை விசாரித்து கையாடல் குறித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வலங்கைமான் சங்கத்தில் எழுத்தராக பணிபுரிந்த அன்புசெல்வி, தலைவர் ஜெயந்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த வழக்கில் பணபரிவர்த்தனை குறித்து வங்கியில் பணிபுரிந்த வினோத்பாபு, ராஜாராமன், ஹரிஹரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்கள் கொடுத்த ஆஜர் எதிரி கவிதாவின் வங்கி பண பரிவர்த்தனை விவரங்களை பெற்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.12.17 15:44:32 +0530

சிட்டி யூனியன் வங்கியில் எதிரி கவிதாவின் கணக்கு விவரங்கள் அடங்கிய ஸ்டேட்மென்ட் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது அ.சா.ஆ.90 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் எதிரி கவிதாவின் கணக்கு விவரங்கள் அடங்கிய ஸ்டேட்மென்ட் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்டது அ.சா.ஆ.91 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்த வழக்கு விசாரணையில் ஏற்கனவே அ.சா.20 ன்மூலம் எதிரியின் ஸ்டேட் பாங்க் வங்கியின் ஸ்டேட்மென்ட் அ.சா.ஆ.67 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.) இந்த வழக்கில் பிரிவு 81 விசாரணை அலுவலராக 09.01.2013 முதல் 22.02.2018 வரை நடந்த முறைகேடுகள் குறித்து விசாரணை செய்ய கூட்டுறவு விசாரணை அலுவலர் திரு.அய்யப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

எனது புலன்விசாரணையிலிருந்தும், சாட்சியங்களின் வாக்குமூலங்களின் அடிப்படையிலும் ஆவணங்கள் அடிப்படையில் எதிரி பணபரிவர்த்தனை செய்த வங்கி விவரங்களிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் மேற்படி வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் அலுவலக அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் கடன் சங்கத்திலிருந்து 09.01.2013 முதல் 22.02.2018 வரை ஆஜர் எதிரி செயலர் பொறுப்பில் இருந்து வந்துள்ளார் அந்த சமயத்தில் மேற்படி சங்கத்திற்கு வரவு வந்த பணத்தை
இனம் 1 இல் (1 முதல் 15 இனங்களுக்கு) கணக்கில் வரவு வைக்காமலும்,
இனம் 2 இல் சங்கத்திற்கு வரவு வந்த பணத்தை தேதி மாற்றி வரவு வைத்து காலதாமதமாக வைத்த வகையிலும், எதிரி தனக்கு சாதகமாக கையாடல் செய்யும் நோக்கத்துடன் ஆவணங்களை திருத்தியும், சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி தன்னுடைய பணியினை செய்யாமல் கையாடல் செய்யவேண்டுமென்ற உட்கருத்துடன் சங்க தொகை மொத்தம் ரூ.20,74,827/- கையாடல் செய்துள்ளார்.

LATHA Digitally signed by LATHA Date: 2025.12.17 15:44:39 +0530

எனவே, எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் 408, 409, 465, 468, 471, 477(A)இதசவின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதால் எதிரி மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : இல்லை**

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.12.17 15:44:45 +0530

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.